**DAILY CURRENT AFFAIRS DATED ON 22/02/2026**







## அமெரிக்கா, சீனா உள்பட 86 நாடுகள் ஆதரவுடன் பிரகடனம் ஏற்பு

**புது தில்லி, பிப். 21:** புது தில்லியில் நடைபெற்ற சர்வதேச செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தாக்க உச்சி மாநாட்டில் 270 பில்லியன் டாலருக்கும் மேலான (ரூ.24 லட்சம் கோடி) முதலீடுகள் உறுதி செய்யப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேலும், 'அமெரிக்கா, சீனா, பிரிட்டன், கனடா, டென்மார்க், ஜெர்மனி உள்பட 86 நாடுகள் மற்றும் இரு சர்வதேச அமைப்புகளின் ஆதரவுடன் உச்சி மாநாட்டு பிரகடனம் ஏற்கப்பட்டது; இது, பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நலனுக்கான ஏ.ஐ. பயன்பாட்டில் உலகளாவிய ஒத்துழைப்பைப் பிரதிபலிக்கிறது' என்றும் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் ஏ.ஐ. ஆதிக்கம் பெருகிவரும் சூழலில், தேசியத் தலைநகர் புது தில்லியில் சர்வதேச ஏ.ஐ. தாக்க உச்சிமாநாடு கடந்த திங்கள்கிழமை தொடங்கி 5 நாள்கள் நடைபெற்றது. பிரான்ஸ், பிரேஸில், ஸ்பெயின், செர்பியா, குரோஷியா, ஸ்விட்சர்லாந்து, இலங்கை, பூடான், மோரீஷஸ் உள்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள், 60-க்கும் மேற்பட்ட அமைச்சர்கள்-இணையமைச்சர்கள் என 100-க்கும் மேற்பட்ட அரசு பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

சுந்தர் பிச்சை (கூகுள்), சாம் அல்ட்மேன் (ஓபன் ஏஐ), பிராட் ஸ்மித் (மைக்ரோசாஃப்ட்) உள்பட சர்வதேச முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள், தலைவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் என 500-க்கும் மேற்பட்ட துறைசார் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற உலகத் தலைவர்களின் முழு அமர்வில் உரையாற்றிய பிரதமர் மோடி, இந்தியா சார்பில் மக்களை மையப்படுத்திய 'மானவ்' தொலைநோக்குப் பார்வையை முன்வைத்தார். ஏ.ஐ. பயன்பாட்டில் தார்மிக நெறிமுறை, பொறுப்பான நிர்வாகம், தேசிய இறையாண்மை, அனைவருக்குமான அணுகல்-உள்ளடக்கம், சட்டப்பூர்வ பயன்பாடு ஆகிய 5 அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

**'உலக நாடுகள் ஏற்பு':** ஏ.ஐ. உச்சி மாநாடு வெள்ளிக்கிழமை நிறைவடைந்த நிலையில், மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களுக்கு சனிக்கிழமை அளித்த பேட்டியில் கூறியதாவது:


தில்லியில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்.

பிரதமர் மோடியால் முன்வைக்கப்பட்ட மக்களை மையப்படுத்திய ஏ.ஐ. தொலைநோக்குப் பார்வை உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஏ.ஐ. வசதிகள் மற்றும் சேவைகள், சமூகத்தில் உள்ள அனைவரையும் சென்றடையும் வகையில் அதற்கான வளங்கள் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும் என்பது அனைவராலும் ஏற்கப்பட்டுள்ளது. 'அனைவருக்கும் நல்வாழ்வு, அனைவருக்கும் மகிழ்ச்சி' என்ற கோட்பாடு உறுதி செய்யப்பட்டுள்ளது.

**மிகப் பெரிய வெற்றி:** ஏ.ஐ. உச்சி மாநாடு, உலகளாவிய கொள்கை வகுப்பாளர்கள், தொழில்துறை தலைவர்கள், தொழில்நுட்ப நிபுணர்களை ஒருங்கிணைத்து, சர்வதேச ஏ.ஐ. நிர்வாகம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் இந்தியாவை முக்கிய நாடாக நிலைநிறுத்தியுள்ளது. ஏ.ஐ. மாநாட்டு கண்காட்சியில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பங்கேற்றுள்ளனர். இது, ஏ.ஐ. மீதான உத்வேகத்துடன் உள்நாடு மற்றும் உலகளாவிய ஈடுபாட்டை பிரதிபலிக்கிறது. அனைத்து அமர்வுகளிலும் பங்கேற்பாளர்களின் ஆர்வமும், தரமான உரையாடல்களும் மிகவும் சிறப்புக்குரியதாக இருந்தது.

உள்கட்டமைப்பு தொடர்பான மூலதன ரீதியில் 250 பில்லியன் டாலருக்கு அதிகமாகவும், புத்தாக்க நிறுவனங்களுக்கான துணிகர மூலதன ரீதியில் 20 பில்லியன் டாலர் அளவிலும் முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

ஏ.ஐ. புதிய யுகத்தில் இந்தியாவின் பங்கு குறித்த உலகின் நம்பிக்கையை பிரதிபலித்த இந்த உச்சி மாநாடு மிகப் பெரிய வெற்றியடைந்துள்ளது என்றார் அவர்.

# இந்தியா–பிரேஸில் 20 பில்லியன் டாலர் வர்த்தக இலக்கு

## அரிய கனிமங்களின் கொள்முதலுக்கு ஒப்பந்தம்

**புது தில்லி, பிப். 21:** இந்தியா-பிரேஸில் இடையிலான இருதரப்பு வர்த்தகத்தின் மதிப்பை அடுத்த 5 ஆண்டுகளில் 20 பில்லியன் டாலர்களாக (ரூ.1.81 லட்சம் கோடி) அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரேஸிலிடம் இருந்து அரிய கனிமங்கள் கொள்முதலுக்கு வழிவகுக்கும் ஒப்பந்தமும் கையொப்பமிடப்பட்டது.

புது தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி, பிரேஸில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா இடையே சனிக்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு பிறகு இது உள்பட பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. தற்போதைய புவி அரசியல் சூழலுக்கு இடையே பாதுகாப்பு, எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்த இரு தலைவர்களும் உறுதி பூண்டனர்.

ஐந்து நாள்கள் அரசுமுறைப் பயணமாக கடந்த பிப்.18-ஆம் தேதி இந்தியா வந்த பிரேஸில் அதிபர் லூலா டா சில்வா, புது தில்லியில் நடைபெற்ற சர்வதேச செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தாக்க உச்சி



புது தில்லியில் சனிக்கிழமை செய்தியாளர்களை சந்தித்து பேட்டியளித்த பிரதமர் நரேந்திர மோடி, பிரேஸில் அதிபர் டா சில்வா.

மாநாட்டில் பங்கேற்றார். பிரதமர் மோடியை சனிக்கிழமை சந்தித்த அவர், விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, எரிசக்தி, தொழில்நுட்பம் உள்பட பல்வேறு துறைகளில் இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்துவது குறித்தும், பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய-சர்வதேச விவகாரங்கள் குறித்தும் இருவரும் ஆலோசித்தனர்.

**பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பம்:** இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின் அரிய கனிமங்கள், உருக்கு, வர்த்தகம், சிறு-குறு-நடுத்தர தொழில் துறை, சுகாதாரம், பாரம்பரிய மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

அரிய கனிமங்கள் கொள்முதலில் சீனாவை நம்பியிருக்கும் நிலையைக் குறைத்து, கொள்முதலை பன்முகப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. உலக அளவில் சீனாவுக்கு அடுத்து அதிக கனிம வளத்தைக் கொண்ட பிரேஸிலுடன் முக்கிய ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது.

**வர்த்தகத்தை அதிகரிக்க இலக்கு:** கடந்த 2024-25 நிலவரப்படி, இந்தியா-பிரேஸில் வர்த்தக மதிப்பு 12 பில்லியன் டாலராகும். இதில் ஏற்றுமதி 6.77 பில்லியன் டாலர்; இறக்குமதி 5.43 பில்லியன் டாலர். அடுத்த 5 ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தக மதிப்பை 20 பில்லியன் டாலராக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

பிரேஸில் அதிபருடன் செய்தியாளர்களுக்கு கூட்டாக அளித்த பேட்டியில் பிரதமர் கூறியதாவது:

லத்தீன் அமெரிக்காவில் இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளி பிரேஸில். நமது வர்த்தகம் வெறும் எண்ணிக்கை அடிப்படையிலானது அல்ல; நம்பிக்கையின் பிரதிபலிப்பு. இந்தியா-பிரேஸில் இடையே கையொப்பமாகியுள்ள அரிய கனிமங்கள் ஒப்பந்தம், மீள்திறன்மிக்க விநியோகச் சங்கிலி கட்டமைப்பை நோக்கிய முக்கிய படிக்கல்.

**எண்ம பொது உள்கட்டமைப்பு:** இந்தியா-பிரேஸில் இடையிலான

### 'மனித குலத்தின் எதிரி பயங்கரவாதம்'

'இந்தியா–பிரேஸில் இடையே பாதுகாப்புத் துறை ஒத்துழைப்பு தொடர்ந்து வலுப்பெற்று வருகிறது. இது, பரஸ்பர நம்பிக்கை மற்றும் வியூக ஒருங்கிணைப்புக்கு சிறந்த உதாரணம். இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயல்படுவதால், தெற்குலகின் குரல் வலுவாகவும், நம்பிக்கை மிக்கதாகவும் மாறியுள்ளது. நமது கூட்டாண்மை உலக அளவில் செல்வாக்குமிக்கதாகும். எந்தவொரு பிரச்னையும் பேச்சுவார்த்தை மற்றும் ராஜீய ரீதியில் தீர்க்கப்பட வேண்டும் என்பதே நமது நம்பிக்கை. பயங்கரவாதமும் அதன் ஆதரவாளர்களும் மனித குலத்தின் எதிரி என்பதில் நாம் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளோம்' என்றார் பிரதமர் மோடி.

தொழில்நுட்ப-புத்தாக்க ஒத்துழைப்பு ஒட்டுமொத்த தெற்குலகுக்கும் பலனளிக்கும். எனவே, பிரேஸிலில் எண்ம பொது உள்கட்டமைப்பு திறன் மையத்தை நிறுவுவது குறித்து பணியாற்றி வருகிறோம். செயற்கை நுண்ணறிவு, சூப்பர் கம்ப்யூட்டர்கள், செமிகண்டக்டர்கள் உள்ளிட்ட துறைகளுக்கும் முன்னுரிமை அளிக்கிறோம்.

இந்தியா-பிரேஸில் நல்லுறவின் முக்கியத் தூண் எரிசக்தித் துறையாகும். ஹைட்ரோகார்பன்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, எத்தனால் கலப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை விரைவுபடுத்தியுள்ளோம் என்றார் பிரதமர் மோடி.

'கொந்தளிப்பான உலகச் சூழலில், பன்முக ஜனநாயக நாடுகளான இந்தியா மற்றும் பிரேஸில் இடையே வியூக உறவுகள் வலுப்படுத்தப்பட வேண்டும்; மோதல் மிகுந்த உலகில் நிலையான, நியாயமான வளர்ச்சிக்கு இடமிருக்காது. தெற்குலகின் நலன்களை பிரதிபலிக்கும் வகையிலான ஐ.நா. சீர்திருத்தங்களுக்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்' என்று பிரேஸில் அதிபர் லூலா டா சில்வா தெரிவித்தார்.

## புது தில்லி பிரகடனத்தின் 7 முக்கிய அம்சங்கள்

ஏ.ஐ. தாக்க உச்சி மாநாட்டின் நிறைவாக, புது தில்லி பிரகடனம் ஏற்கப்பட்டது. ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் சர்வதேச ஒத்துழைப்பு, பன்முக ஈடுபாடு, தேசிய இறையாண்மை மதிக்கப்படுதல் மற்றும் நம்பகமான கட்டமைப்பை வலியுறுத்தும் இந்தப் பிரகடனம் 7 முக்கிய அம்சங்களின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது.

- ஏ.ஐ. வளங்கள் ஜனநாயகமயமாக்கல்
- பொருளாதார வளர்ச்சி–சமூக நலன்
- பாதுகாப்பான–நம்பகமான ஏ.ஐ.
- அறிவியலுக்கான ஏ.ஐ.
- சமூக அதிகாரமளித்தலுக்கான அணுகல்
- மனித மூலதன மேம்பாடு
- மீட்சி–திறன்–புத்தாக்கமிக்க ஏ.ஐ. அமைப்புமுறைகள்

## இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது 10% வரி

### அமெரிக்க உச்சநீதிமன்ற தீர்ப்பால் டிரம்ப் நடவடிக்கை



**நியூயார்க்/வாஷிங்டன், பிப்21:** இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் பொருள்கள் மீது 10 சதவீத வரி விதிக்கும் புதிய பிரகடனத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கையொப்பமிட்டார். இந்த புதிய பிரகடனத்தை அமெரிக்க அதிபரின் அலுவலகமான வெள்ளை மாளிகை சனிக்கிழமை வெளியிட்டுள்ளது.

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் மீது அதிரடி பரஸ்பர வரி விதிப்பை டிரம்ப் மேற்கொண்டது செல்லாது என்று அமெரிக்க உச்சநீதிமன்றம் வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்த நிலையில், இந்த நடவடிக்கையை டிரம்ப் மேற்கொண்டுள்ளார்.

### ஆராய்ந்து வருகிறோம்: மத்திய அரசு

**புது தில்லி, பிப்.21:** வரி விதிப்பு தொடர்பான அமெரிக்க உச்சநீதிமன்ற தீர்ப்பின் தாக்கம் குறித்து ஆராய்ந்து வருவதாக மத்திய அரசு தரப்பில் சனிக்கிழமை தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து மத்திய வர்த்தக அமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் மீது அமெரிக்கா விதித்த பரஸ்பர வரி விதிப்புக்கு எதிராக அமெரிக்க உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு மற்றும் அந்த தீர்ப்பு தொடர்பாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அளித்த பேட்டியையும் மத்திய அரசு கவனத்தில் கொண்டுள்ளது. இந்த தீர்ப்புக்குப் பிறகு பரஸ்பர வரி விதிப்பு தொடர்பான சில அறிவிப்புகளை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. இந்த அனைத்து விவகாரங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்தும் மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது' என்று தெரிவிக்கப்பட்டது.



















The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com



திருப்பத்தூர்
तिरुप्पत्तूर
TIRUPATTUR
REPRESENTATIONAL IMAGE
மாவட்ட பறவையாக இந்திய சாம்பல் நிற இருவாச்சி..!
திருப்பத்தூர் மாவட்டப் பறவையாக இந்திய சாம்பல் நிற இருவாச்சி பறவையை அறிவித்தது மாவட்ட நிர்வாகம்; மாவட்டத்திற்கு என தனித்துவமான பறவையை கண்டறியும் வகையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இந்திய சாம்பல் நிற இருவாச்சி தேர்ந்தெடுக்கப்பட்டதாக மாவட்ட வருவாய் அலுவலர்




“2030க்குள் 33% மின் பேருந்துகள்”
சென்னையில் 380 மின் பேருந்துகள் உள்ளன; தமிழகத்தில் 2030க்குள் 33% பேருந்துகளை மின் பேருந்துகளாக்க இலக்கு
மின் வாகனங்களுக்கு 2027 வரை சாலை வரியிலிருந்து விலக்கு அளித்துள்ளோம்
- முதல்வர் மு.க.ஸ்டாலின்





இடைக்கால வேளாண் பட்ஜெட் 2026-27
இயற்கை வேளாண் மையம்..
விவசாயிகளுக்கு நெல் வகைகள்
இயற்கை வேளாண் மையம்.. விவசாயிகளுக்கு நெல் வகைகள்
58 ஆயிரம் தரிசு நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டு வேளாண் நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன
மன்னுயிர் காப்போம் திட்டம் 142 கோடிரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது
கோவையில் நம்மாழவர் இயற்கை வேளாண் மையம் அமைக்கப்பட்டுள்ளது
900 மெட்ரிக் டன் நெல் வகைகள் சேகரிக்கப்பட்டு 70 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது
தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் சார்பில் 12 லட்சத்து 84 ஆயிரம் விவசாயிகளுக்கு 178 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது





“காலநிலை மாற்றம் நமக்கு அன்றாட நிகழ்வு”
திமுக அரசு பொறுப்பேற்றதிலிருந்து காலநிலை மாநாட்டை சிறப்பாக நடத்திவருகிறோம்
அதிகரிக்கும் வெப்பநிலை, அதிக மழைப்பொழிவு, புயல், வறட்சி போன்றவை தற்போதைய பிரச்னைகள்
காலநிலை மாற்றம் எங்கோ நடக்கும் சம்பவம் கிடையாது; நமக்கு அது அன்றாட நிகழ்வு
நீலகிரி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களை கார்பன் சமநிலையாக மாற்ற திட்டமிட்டு வருகிறோம்
மாநிலத்தின் கார்பன் உமிழ்வை குறைக்க, 2030க்குள்ளான மாநில பங்களிப்பை உருவாக்கி இலக்காக்கப்படும்
மாநிலம் முழுவதும் 5 லட்சம் சந்தன மரக்கன்றுகள் நடவு செய்யப்படும்
- சென்னையில் தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 4.0 நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு


சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால்
அடிக்கல் நாட்டப்பட்டது
17.02.2026
கடற்பசு பாதுகாப்பு மையத்திற்கு அடிக்கல்
தஞ்சையில் ரூ.15 கோடியில் கட்டப்படும்
கடற்பசு பாதுகாப்பு மையத்துக்கு
முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளியில் அடிக்கல்
தஞ்சை மாவட்டம் மனோரா கடற்கரையில்
இந்தியாவின் முதல் கடற்பசு
பாதுகாப்பு மையம் கட்டப்பட இருக்கிறது
பாக். விரிகுடா, மன்னார் வளைகுடா உள்ளடக்கிய 448 சதுர கி.மீ.
பரப்பளவில் கடற்பசுக்களை பாதுகாக்க நடவடிக்கை


தென் இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட்
சிந்தனைச் சிற்பி தோழர்
ம.சிங்காரவேலர்
சுதந்திரப் போராட்ட வீரர்
வழக்கறிஞர்
முதல் மே தினத்தை கொண்டாடியவர்
கம்யூனிஸ்ட்
பிளேக் நோய் நிவாரணப் பணியில் ஈடுபட்டவர்
முதல் தொழிற்சங்கத்தை தோற்றுவித்தவர்
தீவிர வாசிப்பாளர். 20,000 நூல்கள் கொண்ட நூலகம் வைத்திருந்தவர்
1919 ஜாலியன் வாலாபாக் படுகொலையை எதிர்த்து மக்களை திரட்டியவர்
சுயமரியாதை இயக்கத்தின் இதழான குடியரசில் சிங்காரவேலர் தொடர்ந்து பல கட்டுரைகள் எழுதினார்
லேபர் கிசான் கெசட் என்ற ஆங்கில ஏடையும், தொழிலாளன் என்ற தமிழ் வார ஏடையும் நடத்தினார்
84வது வயதில் 1945 சென்னை
அச்சுத் தொழிலாளர் மாநாட்டில் பேசிய கடைசி உரை;
'இந்தியாவின் எதிர்காலம் நம் கையிலுள்ளது.
மிக உயர்ந்த இந்தியாவைக் காண நாம் கனவு காண்போம்.'


BREAKING NEWS
வரி குறைந்தது!
அமெரிக்க உச்ச நீதிமன்ற தீர்ப்பை அடுத்து,
இந்தியா மீதான இறக்குமதி வரிகள்
18%லிருந்து 10%ஆக குறைந்தது!
அமெரிக்க வர்த்தக விரிவாக்க சட்டத்தின்கீழ், ட்ரம்ப் இன்று
புதிதாக விதித்த 10% வரி மட்டும் இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட
நாடுகளுக்கு பொருந்தும் என வெள்ளை மாளிகை அறிவிப்பு.


INTERNATIONAL MOTHER LANGUAGE DAY
YOUTH
VOICES ON
MULTILINGUAL
EDUCATION
2026 THEME